සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## கிறிஸ்தவ சமயம் - ක්‍රිස්තු ධර්මය

தரம் : 7 நேரம்: 2 மணித்தியாலம்

பெயர் /சுட்டெண்:

பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**
- **இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. சகரியா, எலிசபத்தின் மகன் யார்?
   1) மோசே 2) திருமுழுக்கு யோவான் 3) சாமுவேல் 4) பேதுரு

2. இரட்டையன் என்ற நாமத்தைக் கொண்டு அழைக்கப்படுபவர்.
   1) மத்தேயு 2) யோவான் 3) தோமா 4) யூதாஸ்

3. “தேவனே என்னுடைய கால்களை மாத்திரமல்ல கைகளையும், தலையையும் கழுவியருளும்” என்று கூறியது
   1) பேதுரு 2) யாக்கோபு 3) அந்திரேயா 4) யூதாஸ்

4. இயேசு கிறிஸ்து சிலுவையில் கூறிய வார்த்தைகள் எத்தனை?
   1) 3 ஆகும் 2) 7 ஆகும் 3) 5 ஆகும் 4) 10 ஆகும்

5. சீடர்களுக்கு தூய ஆவி அருளப்பட்டது
   1) பெரிய வெள்ளியன்று 2) பெந்தகோஸ்து நாளில்
   3) பொரிய வியாழனன்று 4) பஸ்கா நாளன்று

- **இலக்கம் 6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு கீழே கூறப்பட்டுள்ளவை சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

6. “வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை ஆனாலும் என்னிடம் இருப்பதை உனக்குத் தருவேன்.” என்று கூறியது இயேசு கிறிஸ்துவாகும் ( )

7. இயேசு கிறிஸ்து தனது தாயாகிய மரியாளை ஒப்படைத்தது யோவான் என்ற சீடனிடம் ஆகும் ( )

8. இயேசு கிறிஸ்து சிலுவை பாடனுபவிக்க முன்னர் நடைபெற்ற சம்பவமானது ‘சீடர்களின் பாதம் கழுவுதல்’ ஆகும் ( )

9. கல் அப்பமாகும் படி சொல்லும் என்ற சோதனை இயேசு கிறிஸ்துவுக்கு வந்த மூன்றாவது சோதனையாகும் ( )

10. ஆதி திருச்சபையில் விஷேடமான அம்சம் ஜெபமாகும் ( )

♦ **இலக்கம் 11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு என்ற** A **பகுதியில் கூறப்பட்டுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான சரியான விடையை** B **பகுதியில் தெரிவு செய்து இணைக்க.**

| A | B |
|---|---|
| 11. குடும்பத்தின் அமைப்பாளர் | • தோமா |
| 12. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பை சந்தேகப்பட்டவர் | • எல்லாம் முடிந்தது |
| 13. ஆதி திருச்சபையின் பண்பானது | • இறைவன் |
| 14. பெந்தகோஸ்து நாளைக் குறித்து கூறப்பட்டுள்ளது | • அப்பம் பிட்குதல் |
| 15. சிலுவையில் இயேசு கூறிய 6 வது வார்த்தை | • திருத்தூதுவர் பணி |

♦ **இலக்கம் 6 முதல் 10 வரையுள்ள வினாக்களில் உள்ள இடை வெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து நிரப்புக.**

| 3000, ஜெபம், மண்ணினால், அலங்கார, விசுவாசம் |
|---|

16. இயேசு கிறிஸ்து 40 நாட்கள் வனாந்திரத்தில் இருந்து ..................... செய்தார்.

17. இறைவன் ..................... மனிதனை உருவாக்கினார்.

18. பிறப்பிலிருந்தே ஊனமுற்ற மனிதன் குணமடைந்தது ...................... வாசல் அருகினில்.

19. கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை .................. ஆகும்.

20. பேதுருவின் போதனைகளைக் கேட்டு திருச்சபைக்கு சேர்ந்தவர்கள் ......................... பேர்கள் ஆகும்.

(2×20=40 புள்ளிகள்)

## பகுதி II

♦ **முதலாம் வினா கட்டாயமானதாகும். முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

சுருக்கமாக விடை எழுதுக.

1. 1. இன்றைய சமுதாயத்தில் பிள்ளைகள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் இரண்டு எழுதுக.
   2. இயேசு கிறிஸ்துவுக்கு வந்த சோதனைகள் இரண்டு எழுதுக.
   3. கடைசி இராவிருந்தில், இயேசு கிறிஸ்து அப்பத்தையும்,பாத்திரத்தையும் எதற்கு அடையாளப்படுத்துகிறார்?
   4. நீர் உமது பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் இரண்டு எழுதுக
   5. புதிய சீடனாக சேர்ததுக் கொள்ளப்பட்டவர் யார்? அவர் எப்படி தெரிவு செய்யப்பட்டார்?
   6. இயேசு கிறிஸ்து தனது படிப்பினைக்காக தெரிவு செய்த இடங்கள் இரண்டு எழுதுக.
   7. மனிதனால் இறைபடைப்பு அழிவடையும் சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.
   8. கிறிஸ்தவ பிள்ளையாக உம்மிடமுள்ள நல்ல குணாதிசயங்கள் இரண்டு எழுதுக.

   (2×8=16 புள்ளிகள்)

2. 1. இயேசு கிறிஸ்து சிலுவையில் கூறிய இரண்டு வார்த்தைகளை எழுதுக. (2 புள்ளிகள்)
   2. அவ் வார்த்தைகனினால் நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் 3 எழுதுக. (3 புள்ளிகள்)
   3. உமக்கு குற்றம் செய்கின்றவனை மன்னித்து செய்யும் ஜெபத்தை எழுதுக. (6 புள்ளிகள்)

3. 1. பெந்தகோஸ்து நாளில் நடைபெற்ற முக்கிய சம்பவங்கள் 2 எழுதுக. (2 புள்ளிகள்)
   2. எந்த இறைவாக்கினனின் இறைவாக்கின்படி அச் சம்பவம் நடைபெற்றது? அச்சந்தர்ப்பத்தில் போதனை செய்தது யார்? (3 புள்ளிகள்)
   3. நீர் தூய ஆவியின் வழிகாட்டலை வேண்டி செய்யும் ஜெபத்தை எழுதுக? (6 புள்ளிகள்)

4. 1. ஆதி திருச்சபையில் காணப்பட்ட குணாதிசயங்கள் 2 எழுதுக. (2 புள்ளிகள்)
   2. "நாசரேத்து இயேசுவின் நாமத்தில் எழுந்து நட" இக் கூற்றை கூறியது யார்? யாருக்கு? (3 புள்ளிகள்)
   3. இவ் குணமாக்குதலினால் நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் 3 எழுதுக. (6 புள்ளிகள்)

5. கீழே கூறப்பட்ட வாக்கியங்களில் இடைவெளி நிரப்புக.
   1. உங்கள் சத்துருவுக்கு ....................... காட்டுங்கள.
      உங்களை துன்பப்படுத்துகின்றவர்களுக்கு .................... செய்யுங்கள். (2 புள்ளிகள்)
   2. பரமண்டல ஜெபத்தில் மன்னிப்பைப் பற்றி அடங்கியுள்ள வார்த்தைகளை எழுதுக.(3 புள்ளிகள்)
   3. உமது வகுப்பறையில் தேவைகளுடன் உள்ள நண்பர்களுக்கு செய்யக்கூடிய உதவிகள் 3 எழுதுக (6 புள்ளிகள்)

6. 1. திருவிவிலியத்தில் கூறப்படும் பொன் கட்டளையை எழுதுக. (2 புள்ளிகள்)
   2. இயேசு கிறிஸ்து வாழ்ந்த சமுதாயத்தில் புறக்கனிக்கப்பட்ட மக்கட் பிரிவினர் 3 இனை எழுதுக. (3 புள்ளிகள்)
   3. உமக்குத் தீங்கு செய்பவர்களுக்காக நீர் செய்யக்கூடியவை 3 இனை எழுதுக. (6 புள்ளிகள்)

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.